# தேவனுடைய நித்திய நோக்கம்

Transcribed from a message spoken in April, 2013 in Chennai

By *R.S. Milton*

## நித்திய தரிசனம்

தேவனுக்கு ஒரு நித்திய நோக்கம் உண்டு. இதை நாம் தரிசனம் என்றும் சொல்லலாம். தேவனுக்கு நித்தியமான ஒரு தரிசனம் உண்டு. கடந்த நித்தியம் தொடங்கி வருகின்ற நித்தியம்வரைக்கும் தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்தப் பிரபஞ்சத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார். சாதாரண மனிதர்கள் சில தரிசனங்களை வைத்துக்கொண்டு அந்தத் தரிசனத் திற்காகத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணிக்கிறார்கள். நம் தேவன் இந்தப் பிரபஞ்சத்தில் எல்லா வற்றையும் செய்துகொண்டிருப்பது தம் தரிசனத்தை நிறைவேற்றுவதற்காகத்தான்.

"தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத் தின்படியே நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்," என்று எபேசியர் 1:12 கூறுகிறது. நாம் கிறிஸ்துவினிடத்தில் வந்தது அல்லது நாம் இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசம் வைத்தது ஒரு விபத்தல்ல. அவர் தம் தரிசனத்தைப் பூமியில் நிறைவேற்றுவதற்காக ஏற்ற காலத்தில் அவர் தம் பிள்ளைகளைச் சந்திக்கிறார். அவர் பழைய ஏற்பாட்டில் சந்தித்த மனிதர்கள் அல்லது புதிய ஏற்பாட்டில் சந்தித்த மனிதர்கள் அல்லது இன்று அவர் சந்திக்கின்ற எல்லா மனிதர்களையுமே அவர் தம் தரிசனத்தை நிறைவேற்றுவதற்காகச் சந்திக் கிறார். ஏதோ ஒரு பெரிய கூட்டத்திலே பத்தோடு பதினொன்று என்பதற்காக அல்ல. தேவன் நம்மை அப்படிப் பார்ப்பதேயில்லை. நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றவர்கள், விசேஷித்தவர்கள்.

## தேவனைப் புரிந்துகொள்வதற்கு தேவனுடைய ஆவி

தேவனுடைய தரிசனத்தை அல்லது திட்டத்தை மனிதன் தன் மனதைவைத்து அவ்வளவு எளிதாகப் புரிந்துகொள்வதில்லை. ஓர் எறும்பு மனிதனுடைய மனதில் என்ன இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வது கடினம். ஒருவேளை ஓர் எறும்பு தரையில் இருந்துகொண்டு, "சரி, இவன் தூங்கிக் கொண்டிருக்கிறான். பத்து நிமிடத்தில் கடகடவென்று ஏறி இவனுடைய தலைக்குப் போய்விடலாம். அதன்பின் அவனுடைய மனதில் என்ன இருக்கிறது என்று கண்டுபிடித்துவிடுவது மிகவும் எளிமை யான காரியம்," என்று நினைக்கக்கூடும்.

தேவன் தம் இருதயத்தில், மனதில் என்ன தரிசனத்தை, என்ன திட்டத்தை, என்ன நோக்கத்தை வைத்திருக்கிறார் என்பதை சாதாரண மனிதர்களாகிய நமக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். அவர் தெரியப்படுத்துவதை, வெளிப்படுத்துவதைப் புரிந்துகொள்வதற்கு அவர் நமக்கு ஆவியைக் கொடுத் திருக்கிறார். 1 கொரிந்தியர் 2ஆம் அதிகாரத்தில் பவுல் இதைக் கூறுகிறார்: "தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" (வ.12). ஒளிபரப்புகிற முனையிலும் antenna வைத்திருக்கிறார்கள்; பெறக்கூடிய முனையிலும் antenna வைத் திருக்கிறார்கள். பெறக்கூடிய முனையில் வைத்திருக்கிற antenna ஒளிபரப்புகிற முனையில் வைத் திருக்கிற antennaவைப்போல் அவ்வளவு பெரியதல்ல. ஆனால், பெறக்கூடிய முனையில் வைத் திருப்பதும் antennaதான். தேவன் ஆவியானவராக இருந்து காரியங்களை வெளிப்படுத்துகிறார். தேவன் வெளிப்படுத்துபவைகளைப் புரிந்துகொள்வதற்கு, அறிந்துகொள்வதற்கு, அதே ஆவியான வரை நமக்கும் தந்திருக்கிறார். ஆவியானவர் இல்லாமல் தேவனுடைய மனதை, தேவனுடைய இருதயத்தை, தேவனுடைய திட்டத்தை, நோக்கத்தை, தரிசனத்தைப் புரிந்துகொள்வது கடினமான காரியம். நாம் தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கிறோம். 1 கொரிந்தியர் 2ஆம் அதிகாரம் 12ஆம் வசனத்தை நாம் வாசிக்கலாம்: "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் எங் களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றோம்." 7ஆம் வசனத்திலிருந்தே நாம் வாசித்துப்பார்க்கலாம்: "தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை. காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷ னுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." "ஆனால் தேவனோ அவைகளைத் தம் ஆவியினாலே வெளிப்படுத்தினார்." மனிதனுடைய புத்திசாலித்தனத்தினாலே தேவனுடைய மனதை, தேவனுடைய இருதயத்தைப் புரிந்துகொள்வது கடினம்.

இந்த 20ஆம் நூற்றாண்டில் எவ்வளவோ உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒளி கொஞ் சம் கொஞ்சமாகத்தான் பரவுகிறது என்று இப்போது சொல்லுகிறார்கள். 19ஆம் நூற்றாண்டுவரை வாழ்ந்தவர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் உதிக்கக்கூட இல்லை. அதுபோல தேவனுடைய திட்டம் ஜென்மசுபாவமான மனிதர்களுடைய இருதயத்தில் உதிக்கக்கூட இல்லை. இயற்கையான மனித னால் அல்லது இயற்கையான மனதினால் புரிந்துகொள்ளவே முடியாது. தேவன் அவைகளைத் தம் ஆவியினால் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அதைக் கவனமாக வாசித்துப்பார்த்தால் மிகவும் அற்புதமாக இருக்கும். இதைத்தான் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் கூறுகிறார்: "இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியான வராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்பட வில்லை." இந்த வசனங்களையெல்லாம் நாம் கொஞ்சம் பொறுமையாகப் பார்க்க வேண்டும்.

எப்படி ஓர் எறும்பு மனிதனை ஏறெடுத்துப்பார்த்து, மனிதனுடைய மனதில் என்ன இருக்கிறது என்று சொல்லமுடியாதோ, அதுபோல ஒருவன் லண்டன் பக்கிங்காம் அரண்மனைக்குமுன் நின்று, தலையை இங்கும் அங்கும் திருப்பிப் பார்த்துவிட்டு, "எனக்கு பக்கிங்காம் அரண்மனையைக்குறித்து எல்லாம் தெரியும்," என்று சொல்ல முடியாது. அதனுடைய நீளம், அகலம், உயரம் எல்லாவற்றையும் சுற்றிப் பார்க்கும்போதுதான், "ஓ! இதுதான் இந்த அரண்மனையைக் கட்டியவரின் மனதில் இருந்த உருவமா?" என்று சொல்லத் தோன்றும். இதைப் பரிசுத்த ஆவியானவர் செய்வார். அவர் நம்மை தேவனுடைய நித்திய நோக்கத்தின் நீளம், அகலம், உயரம் ஆகியவைகளுக்குள் கொண்டுசெல்கிறார்.

## தேவனுடைய நித்திய நோக்கம்

எளிய வார்த்தையில் சொல்வதானால், "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற் பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமார னுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்," என்பதுதான் தேவனுடைய நித்திய நோக்கம் (ரோமர் 8:29). "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவ னிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக் கிறோம்" (ரோமர் 8:28). என்ன நன்மை? அவருடைய முதல் குமாரனுடைய ஒத்தசாயலுக்கு பல குமாரர்களை ஆக்குவதுதான் நன்மை.

## குமாரனின் சாயலுக்கு ஒத்தசாயலாக்குவது

இதை நம்மிலும் செய்கிறார், நம்மைக்கொண்டும் செய்கிறார். நம்மை தேவனுடைய முதற்பேறான குமாரனுடைய சாயலுக்கு ஒத்தசாயலாக்குவது வரைபடத்தின் ஓர் அச்சு என்றால், மற்றவர்களைத் தேவனுடைய முதற்பேறான குமாரனுடைய சாயலுக்கு ஒத்தசாயலாக்குவதற்கு நம்மைப் பயன் படுத்துவது வரைபடத்தின் இன்னொரு அச்சு. அது நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பது.

தம் பிள்ளைகளை முழு உலகத்துக்கும், மற்ற பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதமாக மாற்ற வேண்டும் என்பது தேவனுடைய எண்ணம். ஆதியாகமம் 12ஆம் அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமை அழைப் பதைப் பார்க்கிறோம். "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்." நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பாய். இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்தசாயலாக நாம் வளர்வது ஆசீர்வாதம். நாம் யார்யாரோடு தொடர்புகொள்ளுகிறோமோ அல்லது யார்யார் நம்மோடு தொடர்புகொள்ளுகிறார்களோ அவர்களும் இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்தசாயலாக மாறுகிறார்கள் என்பது நாம் அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பது. நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறோமா என்பது நான் ஆசீர் வதிக்கப்படுகிறோமா என்பதற்கு ஒரு பரிசோதனை. இல்லையென்றால் நாம் முட்டாள்களின் உலகத் தில் வாழ்ந்துகொண்டிருப்போம். கர்த்தர் என்னை ஆசீர்வதிக்கிறாரா இல்லையா என்பதற்கு லிட்மஸ் சோதனை என்ன? நான் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறுகிறேனா என்பதுதான்.

## தேவனுடைய திட்டம்

தேவனுடைய தரிசனம் என்பதைப்பற்றி நாம் விவரமாகப் பேச வேண்டும். தேவனுடைய தரிசனம் சமம் தேவனுடைய நோக்கம், தேவனுடைய திட்டம். எல்லா மனிதர்களும் தேவனுடைய சாயலிலே உண்டாக்கப்பட்டார்கள். ஒருவேளை அந்த சாயல் இன்று உடைந்திருக்கலாம். ஆனாலும், அவர் களுக்குள் தேவனுடைய சாயல் இருக்கிறது. நன்மை செய்ய வேண்டும் அல்லது நல்லவனாக இருக்க வேண்டும் என்று விருப்பம் எங்கிருந்து வருகிறது? அது தேவனுடைய சாயலிலிருந்து வருகிறது. அவர்களுக்கு உண்மையிலேயே நாம் கிறிஸ்துவைக் காண்பிக்கும்போது, கிறிஸ்துவைக் கொடுக்கும்போது, கிறிஸ்துவை வழங்கும்போது அவர்கள் பசி தாகத்தோடு கிறிஸ்துவை ஏற்றுக்

கொள்வார்கள். சொல்லப்போனால் இதைத்தவிர தேவனுடைய தரிசனம், தேவனுடைய திட்டம், தேவனுடைய நோக்கம் வேறொன்றுமில்லை. நம்மை கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக்குவது. ஒரு கூட்டம் மக்களை கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக்குவதற்கு அல்லது அவர்களுக்குள் கிறிஸ்துவை வளர்ப்பதற்கு, கொண்டுசெல்வதற்கு, உருவாக்குவதற்கு நம்மை அவர் பயன்படுத்துவது தேவ னுடைய நித்திய இலக்கு, நித்திய நோக்கம், நித்திய தரிசனம். இந்தக் கண்ணோட்டத்தில் நாம் முழு வேதாகமத்தையும், புதிய ஏற்பாட்டையும் வாசித்தால் நாம் தேவனுடைய மனதையும், தேவனுடைய இருதயத்தையும் பார்க்க முடியும்.

## உள்ளான ஜீவன்

சபை என்பது இதுவே தவிர வேறல்ல. கிறிஸ்து நமக்குள் வளர்வது. நாம் கிறிஸ்துவின் சாய லுக்கு ஒத்தசாயலாகுவது. கிறிஸ்து என்ற அச்சு நமக்குள் இருக்கிறார். கிறிஸ்து வெளியே இருக்கிற அச்சு அல்ல. புறம்பான அச்சு நம்மெல்லாருக்கும் தெரியும். அவர் உள்ளே இருக்கிற அச்சு. புறம்பே இருக்கிற அச்சுக்குள் எதையாவது ஊற்றினால் அது அந்த அச்சின் சாயலுக்கு ஒத்தசாயலாகிவிடும். புறம்பேயிருந்து ஓர் அழுத்தத்தைக் கொடுத்து அதை அச்சின் வடிவத்துக்கு ஒத்ததாக மாற்றுவது. ஆனால், நமக்குள் இருக்கும் தேவனுடைய ஜீவன் உள்ளான அச்சு. இந்த அச்சு எப்படி வேலை செய்யுமென்றால் உள்ளேயிருந்து வெளியே ஓர் அழுத்தத்தைக் கொடுக்கும். அதன் விளைவாக, நம்முடைய எல்லாப் பகுதிகளிலும் உள்ளே இருக்கிற கிறிஸ்து என்ற அச்சின் அழுத்தம் இருக்கும் போது நம்முடைய எண்ணங்கள், தீர்மானங்கள், உணர்ச்சிகள், ஆசைகள், நடை, உடை, பாவனை, சுவைகள், மனப்பாங்குகள் எல்லாமே கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்தசாயலாகும். இது ஒவ்வொரு நாளும் நடந்துகொண்டிருக்கிற ஒரு செயல். இதைப் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே செய்கிறார்.

## இயேசுவின் ஆளுகை

இதற்கு எந்த சூத்திரமும் கிடையாது. வேதாகமத்திலிருந்து சூத்திரங்களைக் கண்டுபிடித்து அவை களைப் பயன்படுத்தி இதைச் சாதிக்க முடியாது. "தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வது எப்படி? பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ஆசீர்வாதத்தை மக்கள் எப்படிப் பெற்றுக்கொண்டார்கள்? அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றபோதெல்லாம் என்ன முறையை, வடிவத்தை, வழி முறையை, பயன்படுத்தினார்கள்?" என்று ஆராய்ந்துபார்த்து அதே முறையை, அமைப்பை நாம் பயன்படுத்தினால் தேவன் நம்மை ஆசீர்வதித்துவிடுவாரா? இது வேலைசெய்யாது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தலையாக இருக்க விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் அரசாட்சி செய்ய விரும்பு கிறார். நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும், நம் கூட்டு வாழ்க்கையிலும், நம் தேவையிலும், இயேசு கிறிஸ்து தலையாக இருக்க விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் ஆட்சிசெய்ய விரும்புகிறார். கிறிஸ்து தலையாக இல்லாதபோதும், பரிசுத்த ஆவியானவர் ஆட்சிசெய்யாதபோதும் நாம் என்ன தான் சரியான, நேர்த்தியான முறையை, அமைப்பை, யுக்தியைப் பயன்படுத்தினாலும் தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் பெற முடியாது.

பல எடுத்துக்காட்டுக்களைப் பார்க்க முடியும். ஓர் எடுத்துக்காட்டு தருகிறேன். யோசுவாவும் அவ னுடைய படைகளும் எரிகோ பட்டணத்தைக் கைப்பற்ற வேண்டியிருந்தது. அப்போது தேவன் யோசுவாவைப் பார்த்து, "ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து வர நீங்கள் பட்டணத் தைச் சுற்றிவாருங்கள். ஆறுநாட்கள் ஒருதரம் சுற்றிவாருங்கள். ஏழாம் நாளில் ஏழுதரம் சுற்றி வாருங்கள். பட்டணத்தை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்," என்று கூறினார். தேவன் சொன்னது போல் ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்துகொண்டு ஒவ்வொரு நாளும் ஒருதரம் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டுவந்தார்கள். ஏழாம் நாளில் ஏழுதரம் சுற்றிவந்தார்கள். ஏழாம் நாள் ஏழாவதுமுறை சுற்றிவந்தபிறகு ஆர்ப்பரித்தார்கள். எரிகோவின் மதில்சுவர் இடிந்து விழுந்தது. எரிகோவைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

இதே முறையை இஸ்ரவேல் மக்கள் பின்னாட்களில் பயன்படுத்த நினைத்தார்கள். ஏலி இஸ்ரயேலில் ஆசாரியனாக இருந்தபோது பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தஞ்செய்தார்கள். இஸ்ரயே லர் பெலிஸ்தருக்கு முன்பாக முறியடிக்கப்பட்டார்கள். அவர்கள் சேனையில் போர்க்களத்தில் ஏறக் குறைய நாலாயிரம்பேர் வெட்டுண்டு போனார்கள். ஜனங்கள் திரும்பப் பாளயத்துக்கு வந்தபோது, இஸ்ரயேலின் மூப்பர்கள், "இன்று கர்த்தர் பெலிஸ்தருக்குமுன்பாக நம்மை முறியடித்ததென்ன? சீலோவிலிருக்கிற உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவருவோம். அது நம்மை நம்முடைய பகை ஞரின் கைக்கு விலக்கி ரட்சிக்கும்படி, நம்முடைய நடுவிலே வரவேண்டியது என்றார்கள்" *(1 சாமு. 4:3-4)*. யுத்தத்தில் தோற்றவுடன் சிந்தித்துப்பார்க்கிறார்கள். முந்தைய நாட்களில் அவர்கள் எப்படி யுத்தஞ்செய்தார்கள் என்று யோசித்துப்பார்க்கிறார்கள். "ஆ! எரிகோவைக் கைப்பற்ற யோசுவா

என்ன வழிமுறையைப் பயன்படுத்தினார்? உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டுபோனார்; வெற்றிபெற்றார்கள். அதனால் நாமும் எப்போதெல்லாம் யுத்தத்துக்குச் செல்கிறோமோ அப்போதெல்லாம் உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுபோனால் வெற்றி பெறுவோம்," என்று நினைத்தார்கள். உடன்படிக்கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு யுத்தத்துக்குப் போனார்கள். யுத்தத்திலே வெற்றி பெறவில்லை. மாறாக தோற்றார்கள். உடன்படிக்கைப் பெட்டியும் பிடிக்கப்பட்டது.

அப்போஸ்தலர் நடபடிகளில் ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கிறோம். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் பொல்லாத ஆவிகள் புறப்பட்டு ஓடின. "அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்கு கட்டளையிடுகிறோம் என்றார்கள். பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி..."(அப். 19:13-15). சூத்திரம் வேலைசெய்யாது.

### கர்த்தர் இருக்கிறாரா

மனிதர்கள் வழிமுறையைப் பார்த்து மயங்குவதுபோல பிசாசு வழிமுறையைப் பார்த்து மயங்குவதில்லை. மனிதர்கள் முறையைப் பார்க்கிறார்கள். ஆனால் பிசாசோ, "கர்த்தர் அங்கு இருக்கிறாரா? பரிசுத்த ஆவியானவர் அங்கிருக்கிறாரா? இது பரிசுத்த ஆவியானவரால் ஆரம்பிக்கப்பட்டதா? இது பரிசுத்த ஆவியானவரின் ஆற்றலைக்கொண்டு செய்யப்படுகிறதா? தேவனுடைய நித்திய நோக்கம் நிறைவேறுவதற்காக, கிறிஸ்து உருவாவதற்காக, கிறிஸ்து பரிமாறப்படுவதற்காக, கிறிஸ்து வெளியாக்கப்படுவதற்காக இது செய்யப்படுகிறதா" என்று பார்க்கிறான். Is man a shareholder in the outcome, in the glory? God never expects man to be a shareholder in His glory. Watchman Nee says, "God never appoints us as His assistant supervisor." தேவன் யார்? Supervisor. நாங்கள் assistant supervisors. இது மனிதனுடைய எண்ணம். இது புறஜாதியாருடைய மத சம்பந்தமான மனப்பாங்கு. அவர்களைப் பொறுத்தவரை தேவனிடம் செல்ல வேண்டுமானால் பூசாரி வழியாகத்தான் செல்ல வேண்டும். "சாமி என்ன சொல்றாங்க?"

முறையை ஆசீர்வதிக்க தேவன் கடன்பட்டவரல்ல. "ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் நீர் இந்த முறையை ஆசீர்வதித்தீரே! இது தேவன் ஆசீர்வதித்த முறை! தேவனுடைய தாசன் மோசே பயன்படுத்திய முறை! தேவனுடைய தாசன் யோசுவா பயன்படுத்திய முறை! இது தேவனுடைய தாசனாகிய ஏலி கைவைத்து ஜெபித்து ஆசீர்வதித்த முறை!" என்று நாம் சொல்லலாம். ஏலியும் மரித்தான். அவனுடைய இரண்டு குமாரர்களாகிய ஓப்னியும், பினெகாசும் ஒரே நாளில் இறந்து போனார்கள். உடன்படிக்கைப்பெட்டி பிடிபட்டுப்போயிற்று. பினெகாசின் மனைவி கர்ப்பிணியாக இருந்தாள். அவள் ஆண்பிள்ளையைப் பெற்றாள். மகிமை இஸ்ரயேலை விட்டுப்போயிற்று என்று சொல்லி அந்தப் பிள்ளைக்கு இக்கபோத் என்று பேரிட்டாள். தேவன் முறையைக் கனப்படுத்துகிற தேவன் இல்லை. முறையை வைத்து நாம் மனிதர்களைத் திறம்படக் கவர்ந்திழுக்கலாம். ஆனால், தேவன் அதைக் கண்டுகொள்ளவேமாட்டார்.

### கிறிஸ்துவுடன் ஒன்றாயிருக்கிறோம்

இது புதிய ஏற்பாட்டில் சொல்லப்படுகிற ஒரு விஷயம் இல்லை. தொன்றுதொட்டே இருக்கிறது. ஒரு கூட்டம் மனிதர்கள்மூலமாக இயேசுகிறிஸ்துவை வெளியாக்க வேண்டும். ஒரு கூட்டம் மனிதர்களுக்குள் இயேசுகிறிஸ்துவை வைத்து வெளியாக்குவதுதான் தேவனுடைய திட்டம். மனிதர்கள் சுற்றி இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து நடுவில் இருக்கிறார் என்பதல்ல. நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது இப்படி நினைத்தேன்: நான் ஒரு பாத்திரம். என் இருதயத்தில் ஒரு சிங்காசனம் இருக்கிறது. அதில் ராஜாவாக இயேசுகிறிஸ்து அமர்ந்திருக்கிறார். அப்படியல்ல. அவர் நமக்குள் இருப்பது நம்மோடு ஒன்றாக இணைந்துதான் தம்மை வெளியாக்க முடியுமேதவிர இரண்டாக இருந்து வெளிப்படுத்த முடியாது. அதற்கு அவர் தருகிற உவமைகள். அவர் திராட்சைச்செடி நாம் கிளைகள். செடி ஒரு குறிப்பிட்ட இடத்தில் முடிந்து கிளைகள் இங்கு ஆரம்பிக்கின்றன என்று நாம் பிரிக்கமுடியாது. செடியும் கிளைகளும் ஒன்று. செடிதான் கிளைகள். கிளைதான் செடி. செடியும் கிளைகளும் ஒரே ஜீவனால் ஒரே கனியைத் தருகின்றன. இதுதான் இயேசுகிறிஸ்துவுக்கும் நமக்கும் உள்ள உறவு. நாம் கிறிஸ்துவோடு ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறோம்.

## தேவனுடைய கூடாரம்

இந்த விருப்பத்தை தேவன் ஆதிமுதல் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். "ஒரு கூட்டம் மக்களோடு, மனிதர்களோடு, நான் இணைந்து அதன்மூலம் நான் என்னை வெளியாக்க விரும்புகிறேன்." அதுதான் தேவன் மோசேக்குக் கொடுத்த கூடாரம். இஸ்ரயேல் மக்கள் சுற்றிலும் பாளயம் இறங்கியிருக்கிறார்கள். "நடுவில் எனக்கு ஒரு கூடாரம் அமைப்பாயாக." ஏனெனில், தேவன் மனிதர்கள் மத்தியில் தம்மை வெளியாக்க விரும்புகிறார். மனிதர்களுக்குள்ளிருந்து, மனிதர்கள்மூலமாய், மனிதர்களுக்கு அவர் தம்மை வெளியாக்க விரும்புகிறார். தேவனுடைய மகிமை என்றால் 1000 வாட் மின்விளக்கு என்று நாம் கற்பனை செய்யக்கூடாது. இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது தேவனுடைய மகிமை. எங்கெல்லாம் தேவனுடைய நற்பண்புகள்--தேவனுடைய அன்பு, பரிசுத்தம், நீதி, ஒளி, சந்தோஷம், சமாதானம், இளைப்பாறுதல் வெளியாக்கப்படுகிறதோ--அது தேவனுடைய மகிமை. தேவன் கூடாரத்தைக் கொடுத்தபோது கூடாரத்தின் எல்லா விவரங்களையும் அவர் மோசேக்கு விளக்கிக்காண்பிக்கிறார். இந்தக் கூடாரம் இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கிறது. ஏனென்றால், "அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார்," என்று யோவான் 1:14 கூறுகிறது. 'வாசம்பண்ணினார்' என்பதற்கான கிரேக்க வார்த்தையை 'கூடாரமிட்டார்' என்று மொழிபெயர்ப்பது சரியாக இருக்கும். மோசேக்குக் காண்பித்த கூடாரம் ஓர் அடையாளம். உண்மையான கூடாரம் யார்? இயேசுகிறிஸ்து. கூடாரத்தின் ஒவ்வொரு விவரமும் இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு விவரத்தோடும் பொருந்தும். கூடாரத்தில் இருந்த உடன்படிக்கைப்பெட்டி இயேசுகிறிஸ்து; உடன்படிக்கைப்பெட்டிக்குள் இருந்த பொற்பாத்திரம் அது பிதாவின் தெய்வீக சுபாவம்; உள்ளே இருந்த மன்னா இயேசுகிறிஸ்து நமக்கு உணவாக இருக்கிறார் என்பதற்கு அடையாளம்; உடன்படிக்கைப்பெட்டிக்குள் இருந்த கற்பலகைகள் இயேசுகிறிஸ்து நமக்கு ஜீவப் பிரமாணமாக இருக்கிறார் என்பதற்கு அடையாளம்; உள்ளே இருந்த துளிர்த்த கோல் இயேசு கிறிஸ்து மரணத்தினூடாய்ச் சென்று உயிர்த்தெழுந்து நமக்கு ஜீவனாக இருக்கிறார் என்பதற்கு அடையாளம். கூடாரத்தின் ஒவ்வொரு விவரத்தையும் நாம் இயேசு கிறிஸ்துவின் விவரத்தோடு பொருத்திப்பார்க்க முடியும். கூடாரம் அடையாளம். இயேசுகிறிஸ்து நிஜம்.

## மாதிரியல்ல நிஜம்

கூடாரத்தின் விவரங்களை மட்டும் அவர் காட்டவில்லை. யாத்திராகமம் 31ஆம் அதிகாரத்தைப் பாருங்கள். "நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலேயைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும், வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும் மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனைத் தேவ ஆவியினால் நிரப்பினேன். மேலும் தாண் கோத்திரத்திலுள்ள அகிசாமாதின் அகோலிபையும் அவனோடே துணையாகக் கூட்டினதுமின்றி, ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தை அருளினேன். நான் உனக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் செய்வார்கள்" (யாத். 31:2-6). மோசேக்கு அந்தக் கூடாரத்தின் ஒரு மாதிரியைக் காண்பித்தது மட்டுமல்ல, அகோலியாப், பெசலேய் ஆகிய இருவரையும் கொடுத்து அவர்களை ஞானம் புத்தி அறிவு ஆகியவைகளால் நிரப்புவதாகச் சொன்னார்.

இந்த விவரங்கள் அடங்கிய ஒரு புத்தகம் பெலிஸ்தருடைய கைகளில் கிடைத்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். உடன்படிக்கைப்பெட்டியைக் கட்டுவது எப்படி என்றும், கூடாரத்தை உண்டாக்குவது எப்படி என்றும் அவர்கள் தெரிந்துகொள்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். சிலபேர் சொல்லக் கேட்டிருக்கிறேன்: வேதாகமத்தைத் தலைக்குக்கீழ் வைத்துப் படுத்துக்கொண்டால் பேய் பக்கத்தில் வராதாம். அதுபோல யுத்தத்துக்குச் செல்லும்போது உடன்படிக்கைப் பெட்டியைச் செய்வது எப்படி என்ற புத்தகத்தைக் கொண்டுசெல்லலாம் என்று தீர்மானித்துவிடுவார்கள். எப்படியோ அது பெலிஸ்தருடைய கையில் கிடைத்திருந்தால் அதை வாசித்துப் பார்த்து, "தேவனை எப்படி கீழே இறக்கிக் கொண்டுவருவது என்று இப்போதே நமக்குத் தெரியும், வழிமுறை இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி நாம் ஒரு உடன்படிக்கைப்பெட்டியை உண்டாக்கிவிடுவோம்," என்று செய்திருப்பார்கள்.

"சூசையிடம் செல்லுங்கள்" என்று ஒரு துண்டுப்பிரசுரம் நான் ஒருமுறை பார்த்தேன். "சூசையிடம் செல்லுங்கள் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறதையா..." யாருக்குத் திருவிழா கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள்? மரியாளின் கணவனாகிய யோசேப்புவுக்கு. ஆனால், துண்டுப்பிரசுரம்

யாக்கோபின் குமாரனாகிய யோசேப்பைப்பற்றியது. பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தில் எழுதி வைத்திருக்கிறார். என்னவென்று "சூசையிடம் செல்லுங்கள்." எனவே, சூசையப்பருக்குத் திருவிழா! மக்கள் எப்படியெல்லாம் புரட்டுகிறார்கள்.

20 வசனங்களை மேற்கோள் காட்டிவிட்டால் அது வேதத்துக்கடுத்ததாகிவிடும் என்று மக்கள் நினைக் கிறார்கள். அப்படியல்ல. "வேதத்தில் கொடுக்கப்பட்ட மாதிரியின்படியே அப்படியே பிசகில்லாமல் நாங்கள் உடன்படிக்கைப்பெட்டியை உண்டாக்கிவிட்டோம். தேவனுடைய மகிமை இறங்குவதுதான் பாக்கி. மக்கள் அதைப் பார்க்கக்கூடாமல் முகத்தை மூடுவதுதான் பாக்கி," என்று சொல்லலாம். தேவனுடைய மகிமை இறங்காது. சரியான மரம், சரியான நூல், சரியான துணி, சரியான அளவு, சரியான நிறம். எல்லாவற்றையும் நாம் சரியாகப் பார்த்து பார்த்து செய்தாலும் அதனுடைய நிஜம் கட்டுமானப் பொருள் அல்ல. அதைக் கட்டுகிறவன் தேவனால் நியமிக்கப்பட்டவன். தேவனுடைய ஆவியானவர் அதை ஆரம்பிக்க வேண்டும். தேவனுடைய ஆவியானவர் அதற்கான ஞானத்தையும், புத்தியையம், அறிவையும் தர வேண்டும். தேவனுடைய ஆவியானவருடைய பலத்தினால் அது செய்யப்பட வேண்டும். தேவன் மட்டுமே அதில் மகிமையடைய வேண்டும். மனிதன் சுயநலவாதி யாக அதில் ஒரு பங்குதாரராக மாறக்கூடாது. "தேவனுக்கே மகிமை. நான் கரங்களை வைத்தேன். சாத்தான் ஓடினான். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆனால், தேவனுடைய மகிமை வெளி யரங்கமாவதற்குக் கருவியாக இருந்தது நான்தான். தேவனே, நீர் பார்த்துக்கொள்ளும். உதவிபெற்ற மனிதனே, நீயும் பார்த்துக்கொள்," என்று சொன்னால் அதின் பொருள் என்ன? அவர்மேல் ஓர் அடையாளத்தைப் போட்டுவிட்டோம் என்று பொருள். "என்மூலமாக பிசாசு துரத்தப்பட்ட மனிதன், என் உதவிபெற்ற மனிதன்," என்ற எண்ணம் அங்கு இருக்கிறதே! இது தொன்றுதொட்டு மக்கள் பயன்படுத்துகிற முறைமை.

## இருதயத்தைப் பார்க்கும் தேவன்

பாகாலின் தீர்க்கதரிசிகள் இந்த முறையைப் பயன்படுத்தினார்கள். ஒரு பலிபீடத்தைக் கட்டினார்கள். காளைகளை வெட்டி பலிபீடத்தில் வைத்தார்கள். பாட்டுப் பாடினார்கள். கொட்டு அடித்தார்கள். சுற்றிச்சுற்றி வந்து பாட்டுப் பாடினார்கள். அக்கினி இறங்கவில்லை. எலியா சாயங்காலம் வருகிறார். சுற்றி தண்ணீர் ஊற்றுகிறார். வேதாகமத்தில் எழுதி வைத்திருக்கிற அவருடைய ஜெபத்தை நாம் படித்தால் ஒரு நிமிடத்தில் படித்து முடித்துவிடலாம். ஒரு நிமிட ஜெபமா அல்லது காலையிலிருந்து சாயங்காலம்வரை ஜெபமா? எங்கே தவறு செய்தோம்? எல்லாம் சரியாகத்தான் செய்திருக்கிறோம். பலிபீடத்தைச் சரியாகத்தானே கட்டியிருக்கிறோம். எலிசா தேவனுடைய இருதயத்தைத் தன்னுடைய இருதயமாக்கிக் கொண்டான். மோசே தேவனுடைய இருதயத்தைத் தன்னுடைய இருதயமாக்கிக் கொண்டான். அகோலியா, பெசலேய் ஆகிய இருவரும் தேவனுடைய இருதயத்தைத் தங்களுடைய இருதயமாக்கிக் கொண்டார்கள். அதைத்தான் தேவன் பார்க்கிறார்.

பவுல் பிசாசைத் துரத்தியபோது பிசாசுகள் புறப்பட்டு ஓடின. ஸ்கேவாவின் குமாரர்கள் துரத்தின போது ஓடவில்லை. ஏனென்றால், பவுல் இயேசுவின் இருதயத்தைத் தன் இருதயமாக்கியிருந்தார். "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது." ஸ்கேவாவின் குமாரர்களுக்குப் புறம்பான காரியத்தில்தான் ஈடுபாடு. இயேசுகிறிஸ்துவின் இருதயத்தில் அவர்களுக்கு ஈடுபாடு இல்லை.

"நான் போய் கையை வைத்ததும் பேய் ஒரு சுருட்டுசுருட்டி ஓடிச்சு பாருங்க. நம்முடைய பெயர் கல்கத்தாவிலுள்ள பேய்களுக்கும் தெரிந்திருக்கிறது," என்று சொன்னதை நான் கேட்டிருக்கிறேன். இது மதுரையில் ஒரு பெரிய பணக்கார ஊழியக்காரர் சொன்னது. "அருமையான தேவனுடைய ஜனமே, அவனிடம் கொண்டுபோனால்தான் நான் ஓடுவேன் என்று பேய் சொன்னது. நம்முடைய பெயர் கல்கத்தாவிலுள்ள பேய்களுக்கும் தெரிந்திருக்கிறது. இதை இயேசு செய்தார்." அது நான் இரட்சிக்கப்பட்ட புதிது. மதுரையில் படித்துக்கொண்டிருந்தேன். மதுரை தமுக்கம் திடலில் உட்கார்ந் திருந்தேன். எனக்கே தெரிந்தது. இது வாந்தி வரவழைக்கிறது. இது என்ன பெருமை? தேவன் பாராட்டிவிட்டார் என்பதல்ல. பேய் பாராட்டிவிட்டதாம். "எனக்கு அவனைத் தெரியும்" என்று பேய் சொல்லிவிட்டதாம். "எனக்கு அவனைத் தெரியும்" என்று பேய் சொல்லுமா சொல்லாதா?" "எனக்கு பவுலையும் தெரியும், இயேசுவையும் தெரியும்" என்று பேய் சொன்னது. பிலிப்பியருக்கு எழுதும் போது "அருமையான சகோதரர்களே, பேய் என்ன சொன்னது தெரியுமா? பவுலை எனக்குத் தெரி யும் என்று சொன்னது. நான் எப்பேர்ப்பட்ட ஆள் என்று இப்போது உங்களுக்குப் புரிகிறதா?" என்று பவுல் எழுதவில்லை. இருதயம்தான் முக்கியம். தேவன் இருதயத்தைப் பார்க்கிறார்.

**சபை**

சபை என்றால் என்ன? "சரியானபடி மூப்பர்கள் இருக்கிறார்கள். சரியானபடி கூட்டம் எப்படி நடக்க வேண்டும் என்று தெரிந்துவிட்டது. வேதாகமத்தை எப்படிப் படிக்க வேண்டும் என்ற சொல்லியாச்சு. நேர்த்தியான சபை என்பதற்கு உள்ளூர் என்ற தளம். அப்புறம் அந்தியோக்கியாவிலுள்ள சபை என்று பெயர். இப்போது எல்லாவற்றையும் வேதத்தின்படி, முறைமையின்படி சரியாகச் செய்தா யிற்று. ஒன்றேவொன்றுதான் பாக்கி. இயேசுகிறிஸ்து இறங்கிவந்து சாட்சி கொடுக்க வேண்டும். ஆசீர்வதிக்க வேண்டும்," என்று மக்கள் காத்திருக்கிறார்கள். நடக்குமா?

திருவெளிப்பாடு 2ஆம் அதிகாரத்தில் ஆவியானவர் ஏழு சபைகளுக்கு நிருபம் எழுதுகிறார். அதில் எபேசு சபைக்கு எழுதும்போது, "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமை யையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங் களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்ட தையும், நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்," என்று பல நேர்மறையான காரியங் களைக் கூறிவிட்டு ஒரு காரியம் சொல்லுகிறார். "ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு" (வெளி. 2:2-4). "ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" (வ. 5). இது எதைக் காட்டுகிறது என் றால் விளக்குத்தண்டு என்பது தேவனுடைய பிரசன்னம், கர்த்தருடைய பிரசன்னம், பரிசுத்த ஆவி யானவருடைய பிரசன்னம். 1 கொரிந்தியர் 14:25: "அவன் முகங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்." "நான் உங்கள் மத்தியிலே வரும்போது தேவனுடைய அன்பை, தேவனுடைய சமாதானத்தை, தேவ னுடைய மகிழ்ச்சியை, தேவனுடைய இளைப்பாறுதலை அநுபவித்தேன்," என்று புதிதாக வந்த ஒரு வன் சொன்னால் இதுதான் தேவனுடைய பிரசன்னம்.

பெயர் சரியாக இருக்கிறதா? தளம் சரியாக இருக்கிறதா? மூப்பர்கள் சரியாக இருக்கிறார்களா? வேதாகமத்தின்படி நியமித்திருக்கிறோமா? வேறு என்னென்ன வேண்டும்? பாடல்கள் உபதேசத்தின் படி சரியாக இருக்கிறதா? இவைகளா முக்கியம்? இவைகள் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. இவைகளை சரியாகப் பண்ணக்கூடாது என்று நான் சொல்லவில்லை. இவைகளைச் சரியாகப் பண்ணவேண்டும். இப்போது மோசே வந்து, "முன்மாதிரியெல்லாம் முக்கியம் இல்லை. கூடாரத்தை எப்படி வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளலாம்," என்று சொன்னால் தேவன் மகிமைப்படுவாரா? கூடா ரத்துக்கு விவரங்கள் உண்டு. ஆனால், விவரங்களின்படி மட்டுமே கட்டின கூடாரம் என்பதால் அது தேவனை வெளியாக்கிவிடாது, வெளியரங்கமாக்கிவிடாது. முறைமை வெறுமனே மேலெழுந்தவாரி யானது. கர்த்தர் அங்கு இருக்கிறாரா? பரிசுத்த ஆவியானவர் அங்கு இருக்கிறாரா? புதிய ஏற்பாட் டில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இப்படி கூறுகிறார்: "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்பு கிறேன்." அந்திப்பலி 1, பலி 2, பலி 3, பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்.

சபை என்பது நாம் ஒருவரோடொருவர் கொள்ளும் உறவிலே நான் சிறிதளவேனும் கிறிஸ்துவைப் பகிர்ந்துகொடுக்கிறேனா? நான் என் சகோதரனோடு கொண்டுள்ள இந்த உறவினாலே கிறிஸ்து அவ னுக்குள் பெருக முடிகிறதா? எந்தப் பகுதியில் கிறிஸ்து குறைவுபடுகிறாரோ அந்தப் பகுதியில் நான் கிறிஸ்துவை வழங்குகிறேனா? எந்த அளவுக்கு சகோதர சகோதரிகள் ஒருவருக்கொருவர் கிறிஸ் துவை வழங்குகிறார்களோ அந்த அளவுக்கு அது சபை. எங்கு கடித்துக்குதறுதலும், பட்சித்தலும் இருக்கிறதோ அது சபை அல்ல. ஒரு சகோதரனிடம் ஒரு குறை இருக்கலாம்: "உன்னிடம் ஒரு குறை இருக்கிறது." இது சபை ஆகுமா? "என்ன சகோதரனே, முடி இப்படி இருக்கிறது?" இது வெளியே பார்க்கிற குறை. உள்ளே இரும்புச்சத்து குறைவாக இருக்கலாம். பொதுவாக நாம் வெளியே இருக்கிற முடிகொட்டுகிற குறையைத்தான் பார்ப்போம். உள்ளே இரும்புச்சத்து குறைவு படுவதைப் பார்க்கமாட்டோம். வெளியே இருக்கிற குறைகளைப் பார்த்து நாம் சரிசெய்துகொண் டிருக்க வேண்டாம். இதற்கு அடிப்படையான கிறிஸ்து எங்கு குறைவுபடுகிறார்? அந்தக் கிறிஸ்துவை இவருக்கு வழங்க நாம் தேவனிடம் ஞானத்தைப் பெற வேண்டும். கிறிஸ்துவை எப்படி வழங்குவது என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். சபை என்றால் சகோதர சகோதரிகள் ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவு. ஆனால், இதன் நடைமுறை விவரங்கள் என்னவென்று எனக்கு இன்னும் முழுமையாகத் தெரியாது. நாம் கற்றுக்கொள்கிறவர்களாகத்தான் இருக்கிறோம். ஞாயிற்றுக்கிழமை

கூடிவருகிறோம் அல்லது மற்ற நாட்களில் தொலைபேசியில் தொடர்புகொள்கிறோம். இதை நாம் சரியாகச் செய்யும்வரை நாம் சபை என்று சொல்ல முடியாது. "நான் மற்ற சகோதர சகோதரிகளோடு எப்படி உறவுகொள்வது, அப்படி உறவுகொள்வதால் அவர்களுக்கு உம்மை எப்படி வழங்குவது என்று எனக்குக் கற்றுத்தாரும்," என்று நாம் ஜெபிக்க வேண்டும். மற்றவர்களுக்கு கிறிஸ்துவை வழங்குவது எப்படி என்று நமக்குத் தெரியாது.

ஒன்று, *தேவனுடைய நித்திய தரிசனம் அவருடைய குமாரனை ஒரு கூட்டம் மக்களுக்குள் உருவாக்கி அவரை வெளியாக்குவது.* இதைத்தவிர வேறெதிலும் அவருக்கு ஈடுபாடு இல்லை. இரண்டு, தேவன் ஒவ்வொரு காலத்திலும் ஒரு முறையை, அமைப்பை, யுக்தியைப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், *அதே அமைப்பை, முறையை, யுக்தியைப் பயன்படுத்துவதால் தேவன் அதை ஆசீர்வதித்துத்தான் ஆகவேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் கிடையாது.* இன்று பரிசுத்த ஆவியானவர் அதை ஆரம்பிக்கிறாரா? பரிசுத்த ஆவியானவர் அதில் பாரப்படுகிறாரா? பரிசுத்த ஆவியானவர் பலப்படுத்துகிறாரா? இது தேவனை மகிமைப்படுத்துமா? மூன்றாவது, *சபை என்பது நாம் ஒருவரோடொருவர் கொண்டுள்ள உறவு.* இந்த உறவின் நடைமுறை விளைவுகள் எப்படி இருக்கும் என்று நமக்குத் தெரியாது. நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். 10--30 வருடங்கள் ஆகலாம் என்று நினைக்கிறேன். நாமெல்லாரும் L Board மாட்டிக்கொள்ளலாம். நாமெல்லாருமே L Boardதான். சாலையில் செல்லும்போது 10பேர் L Board மாட்டிக்கொண்டு கார் ஓட்டினால் ஒவ்வொருவரும் மற்றவர்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருப்பார்கள். 'ஜாக்கிரதையாயிருங்கள்' என்று சொல்லமாட்டேன். நாம் எல்லாரும் ஒருவரிடம் ஒருவர் நீடிய சாந்தத்தோடு இருக்க வேண்டும். "உறவுகொள்வது எப்படி என்று அவருக்குத் தெரியவேமாட்டேன் என்கிறது." நமக்கும் தெரியாது. பொறுமையோடு இருப்போம்.